06.07.2022

S.T.C.No. 1203/2019 அ.சா.1 ஆனந்தகுமார்

**(சாட்சி மனுவின்மீது திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

**குறுக்கு விசாரணை**

1) நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் 25 ஆண்டுகளாக லாரி ஓட்டுநராக பணியாற்றிவருகிறேன். என்னிடம் சொந்த லாரி இல்லை என்றும் மற்றொருவரின் லாரியில் தான் ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன் என்றால் சரிதான். ஒரு டிரிப் ஓட்டினால் எவ்வளவு வருமானம் கிடைக்கும் என்றால் ரூ. 20,000 /- கிடைக்கும். மாதத்திற்கு எத்தனை டிரிப் ஓட்டுவேன் என்றால் 3 டிரிப் ஓட்டுவேன். எப்போதும் மாதம் 3 டிரிப் ஓட்டுவேனா என்றால் குறைந்தது 2 டிரிப் ஓட்டுவேன். மாற்று ஓட்டுநர் இருக்கிறார்களா என்றால் இல்லை நான் மட்டும் தான் ஓட்டுவேன். மேற்படி சங்கதிகளை புகாரிலும் முதல் விசாரனையிலும் தெரிவிக்கவில்லை என்றால் இல்லை.

2) வேறு என்ன வருமானம் உள்ளது என்றால் 3 ஏக்கர் விவசாய நிலம் உள்ளது மற்றும் ஆடு, மாடுகள் வைத்துள்ளேன் அதன் மூலமும் வருடத்திற்கு சுமார் 5 லட்சம் வரை வருமானம் வருகிறது. என்னுடைய வருமானங்களை வங்கியில் போட்டு வைக்கும் பழக்கம் உள்ளதா என்றால் தேவையானது போக மீதியை வங்கியில் போடுவேன். அதேபோன்று தெரிந்த நபர்களுக்கு அவர்களின் அவசர தேவைக்கு வட்டிக்கு பணம் கொடுக்கும் பழக்கம் உள்ளதா என்றால் கொடுப்பேன் ஆனால் வட்டிக்கு கொடுக்கமாட்டேன்.

3) எதிரியை எத்தனை ஆண்டுகளாக எனக்கு தெரியும் என்றால் 10 வருடமாக தெரியும். எதிரி சங்ககிரிக்கு வந்த பிறகு நன்கு எனக்கு அறிமுகம் ஆகிவிட்டார் என்றால் சரிதான். எதிரி என்ன தொழில் செய்கிறார் என்றால் பாரத் கேஸ் ஏஜென்டாக தொழில் செய்து வருகிறார். மேற்படி தொழிலுக்கு எதிரி மட்டும் தான் உரிமையாளரா என்றால் ஆமாம்.

4) உண்மையில் எதிரி எனக்கு நன்கு அறிமுகம் ஆகியிருந்தால் எதிரி என்ன தொழில் செய்கிறார் என்று எனக்கு தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல.

மேற்படி தொழிலை எதிரியின் மாமா தான் செய்து வருகிறார் என்றால் சரியல்ல.

(நீதிமன்றத்திற்கு போதிய நேரம் இல்லாததால் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது).

Sd/- Aananthakumar

Sd/- S.R.Babu 06.07.2022,
Judicial Magistrate No.1, Sankari.